# முதலாம் திருப்புதல் தேர்வு - 2024

வகுப்பு : 10
காலம் : 3.00 மணி

## தமிழ்

பதிவு எண் : 10862116

மொத்த மதிப்பெண்கள் : 100

### பகுதி- I

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 15x1=15

1. ' மொத்த வணிகலன் ' என்னும் தொடரில் தமிழழகனார் குறிப்பிடுவது ..................
   அ) வணிகக் கப்பல்களும் ஐம்பெரும் காப்பியங்களும் ஆ) பெரும்வணிகமும், பெரும் கலன்களும்
   இ) ஐம்பெரும் காப்பியங்களும் அணிகலன்களும் ஈ) வணிகக் கப்பல்களும் அணிகலன்களும்

2. __பெரிய மீசை சிரித்தார்__ – வண்ணச் சொல்லுக்கான தொகையின் வகை எது ?
   அ) பண்புத் தொகை ஆ) உவமைத்தொகை இ) அன்மொழித் தொகை ஈ) உம்மைத் தொகை

3. சீவலமாறன் என்ற பட்டப்பெயரை கொண்டவர் ..................
   அ) அதிவீரராம பாண்டியர் ஆ) ஒட்டக்கூத்தர் இ) இரண்டாம் ராசராசன் ஈ) கம்பர்

4. 'வாடா இராசா, வாடா கண்ணா' என்று மகளைப் பார்த்துத் தாய் அழைப்பது எவ்வகை வழுவமைதி ..........
   அ) பால் வழுவமைதி ஆ) திணை வழுவமைதி இ) மரபு வழுவமைதி ஈ) கால வழுவமைதி

5. பரிபாடல் அடியில் 'விசும்பும் இசையும்' என்னும் தொடர் எதனைக் குறிக்கிறது ?
   அ) வானத்தையும், பாட்டையும் ஆ) வானத்தையும் புகழையும்
   இ) வானத்தையும் பூமியையும் ஈ) வானத்தையும் பேரொலியையும்

6. பெண்பாற் பிள்ளைத் தமிழ் கடைசி மூன்று பருவங்கள் தேர்ந்தெடுக்க.
   அ) சிற்றில், சிறுபறை, சிறுதேர் ஆ) காப்பு, செங்கீரை, தால்
   இ) கழங்கு, அம்மானை, ஊசல் ஈ) சப்பாணி, முத்தம், வருகை

7. கரகாட்டத்தைக் கும்பாட்டம் என்றும் குடக்கூத்து என்றும் கூறுவர். இத்தொடருக்கான வினா எது ?
   அ) கரகாட்டம் என்றால் என்ன ? ஆ) கரகாட்டம் எக்காலங்களில் நடைபெறும் ?
   இ) கரகாட்டத்தின் வேறுபெயர்கள் யாவை ? ஈ) கரகாட்டத்தின் வேறு வடிவங்கள் யாவை ?

8. சரியான அகரவரிசையைத் தேர்ந்தெடுக்க.
   அ) உழவு, மண், ஏரி, மாடு ஆ) மண், மாடு, ஏர், உழவு
   இ) உழவு, ஏர், மண், மாடு ஈ) ஏர், உழவு, மாடு, மண்

9. மேன்மை தரும் அறம் என்பது ..........................
   அ) கைமாறு கருதாமல் அறம் செய்வது ஆ) மறுபிறப்பில் பயன் பெறலாம் என்ற நோக்கில் அறம் செய்வது
   இ) புகழ் கருதி அறம் செய்வது ஈ) பதிலுதவி பெறுவதற்காக அறம் செய்வது

10. காலக் கணிதம் கவிதையில் இடம் பெற்ற தொடர் ..................
    அ) இகழ்ந்தால் என் மனம் இறந்து விடாது ஆ) என் மனம் இகழ்ந்தால் இறந்து விடாது
    இ) இகழ்ந்தால் இறந்து விடாது என் மனம் ஈ) என் மனம் இறந்து விடாது இகழ்ந்தால்

11. பூக்கையைக் குவித்துப் பூவே புரிவொடு காக்க என்று ................ வேண்டினார்.
    அ) கருணையன், எலிசபெத்துக்காக ஆ) எலிசபெத், தமக்காக
    இ) கருணையன், பூக்களுக்காக ஈ) எலிசபெத், பூமிக்காக

**பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

பூக்கையைக் குவித்துப் பூவே
புரிவொடு காக்கென்று அம்பூஞ்
சேக்கையைப் பரப்பி இங்கண்
திருந்திய அறத்தை யாவும்

யாக்கையைப் பிணித்தென்று ஆக
இனிதிலுள் அடக்கி வாய்ந்த
ஆக்கையை அடக்கிப் பூவோடு
அழுங்கணீர் பொழிந்தான் மீதே.



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

12. இப்பாடல் இடம் பெற்ற நூல் எது ?

அ) தேம்பாவணி ஆ) சிலப்பதிகாரம் இ) காலக்கணிதம் ஈ) கம்பராமாயணம்

13. இப்பாடலின் ஆசிரியர் யார் ?

அ) கம்பர் ஆ) கண்ணதாசன் இ) இளங்கோவடிகள் ஈ) வீரமாமுனிவர்

14. இப்பாடலில் இடம்பெறும் எதுகைச் சொற்களை தேர்ந்தெடுக்க.

அ) பூக்கையை, சேக்கையை ஆ) பூக்கையை, குவித்து இ) ஆக்கையை, அடக்கி ஈ) திருந்திய, அறத்தை

15. 'ஆக்கையை அடக்கிப் பூவோடு
அழுங்கணீர் பொழிந்தான் மீதே', இவ்வடியில் அழுங்கணீர் பொழிந்தான் என்பது யாரைக் குறிக்கிறது ?

அ) கருணையன் ஆ) இறைவன் இ) வீரமாமுனிவர் ஈ) எலிசபெத்

## பகுதி-II (பிரிவு-I)

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.**
**(21வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்கவும்.)** 4x2=8

16. விடைக்கேற்ற வினாக்கள் அமைக்க.
அ) கரகாட்டத்தின் துணையாட்டமாகவும் மயிலாட்டம் ஆடப்படுகிறது.
ஆ) கிரேக்க அறிஞர் ஹிப்பாலஸ் என்பவர் பருவக்காற்றின் பயனை உலகிற்கு உணர்த்தினார்.

17. வேங்கை என்பதைத் தொடர்மொழியாகவும் பொதுமொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.

18. வருகின்ற கோடை விடுமுறையில் காற்றாலை மின் உற்பத்தியை நேரில் காண்பதற்கு ஆரல்வாய் மொழிக்குச் செல்கிறேன் – இத்தொடர் கால வழுவ அமைதிக்கு எடுத்துக்காட்டாக அமைவது எவ்வாறு ?

19. புறத்திணைகளில் எதிர் எதிர் திணைகளை அட்டவணைப்படுத்திடுக.

20. நான் எழுதுவதற்கு ஒரு தூண்டுதலும் அதற்குரிய காரணமும் உண்டு – இத்தொடரை இரு தொடர்களாக்குக.

21. 'வினை ' என முடியும் திருக்குறளை அடிபிறழாமல் எழுதுக.

### (பிரிவு-2)

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** 5x2=10

22. சொற்களை இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக.
தேன், விளக்கு, மழை, விண், மணி, விலங்கு, செய், மேகலை, வான், பொன், பூ

23. கலைச் சொல் அறிக.
அ) Ancient Literature ஆ) Emblem

**குறிப்பு - செவி மாற்றுத்திறனாளிக்கான மாற்று வினா.**
**பின்வரும் தொடர்களைக் கொண்டு பொருத்தமான தொடர் அமைக்க :** வரப்போகிறேன், இல்லாமல் இருக்கிறது.

24. உவமையைப் பயன்படுத்தி சொற்றொடர் உருவாக்குக.
அ) தாமரை இலைநீர் போல ஆ) சிலை மேல் எழுத்து போல

25. தொடரில் விடுபட்ட வண்ணங்களை உங்களின் எண்ணங்களால் நிரப்புக.
அ) ..................... மனம் உள்ளவரை அப்பாவி என்கிறோம்.
ஆ) வெயிலில் அலையாதே உடல் ..................

26. பழமொழிகளை நிறைவு செய்க. அ) ஒரு பானை ................. ஆ) அளவுக்கு ................

27. தொகைச் சொற்களைப் பிரித்து எழுதி,தமிழ் எண் தருக. அ) முத்தமிழ் ஆ) ஐந்திணை

28. அகராதியில் காண்க. அ) பூட்கை ஆ) அழல்

## பகுதி-III (பிரிவு-I)

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** 2x3=6

29. **உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.**
இரவலர் வராவிட்டாலும் உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் அதியன் என்கிறார் ஔவையார். அவர்களைத் தேடி வரவழைத்தல் ஆடுகோட்பாட்டுச் சேரலாதனின் இயல்பு என்கிறார் நச்செள்ளையார். பேகன் மறுமை நோக்கி கொடுக்காதவன் என்கிறார் பரணர். தன்னை நாடி வந்த பரிசிலன் பொருள் பெறாமல் திரும்புவது தான் நாட்டை இழந்த துன்பத்தைவிடப் பெருந்துன்பம் எனக் குமணன் வருந்தியதாகப் பெருந்தலைச் சாத்தனார் குறிப்பிட்டுள்ளார்.



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

1. உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் யார்?
2. மறுமை நோக்கிக் கொடுக்காதவன் என்று பரணர் யாரைக் கூறுகிறார்?
3. குமணன் வருந்தியதாகப் பெருந்தலைச் சாத்தனார் எதனைக் குறிப்பிடுகிறார்?

30. வள்ளுவம் சிறந்த அமைச்சருக்கு கூறிய இலக்கணங்கள் நமக்கு பொருந்துவதைக் குறள் வழி விளக்குக.

31. 'சித்தாளின் மனச்சுமைகள்
செங்கற்கள் அறியாது' – இடஞ்சுட்டிப்பொருள் தருக.

**(பிரிவு-2)**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **2x3=6**
**(34-வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்)**

32. சோலைக் (பூங்கா) காற்றும் மின்விசிறிக் காற்றும் பேசிக் கொள்வது போல் ஓர் உரையாடல் அமைக்க.
33. மன்னன் இடைக்காடனார் என்ற புலவருக்குச் சிறப்புச் செய்தது ஏன்? விளக்கம் தருக.
34. அ) ' வாளால் அறுத்துச் ' எனத் தொடங்கும் பெருமாள் திருமொழிப் பாடலை எழுதுக. **(அல்லது)**
ஆ) ' மாற்றம் எனது ...' எனத் தொடங்கும் காலக் கணிதம் பாடலை எழுதுக.

**(பிரிவு-3)** **2x3=6**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.**

35. வினா எத்தனை வகைப்படும்? அவை யாவை? விளக்குக.
36. கவிஞர் தாம் கூற விரும்பும் கருத்திற்கு ஏற்றவாறு தற்குறிப்பேற்ற அணி அமைவதை எடுத்துக்காட்டுக.
37. ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும் – அலகிட்டு வாய்பாடு தருக.

**பிரிவு-IV**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **5x5=25**

38. அ. மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும் பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப்பேச்சு ஒன்றை உருவாக்குக.

**(அல்லது)**

ஆ. கருணையனின் தாய் மறைவுக்கு, வீரமாமுனிவர் பூக்கள் போன்ற உவமைகளாலும் உருவக மலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விவரிக்க.

39. அ. மாநில அளவில் நடைபெற்ற 'மரம் இயற்கையின் வரம்' எனும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.

**(அல்லது)**

ஆ) பள்ளியைத் தூய்மையாக வைத்திருத்தல் குறித்த செயல்திட்ட வரைவு ஒன்றை உருவாக்கி, அதனைச் செயல்படுத்த தலைமை ஆசிரியரின் ஒப்புதல் வேண்டி தலைமை ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.

40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



41. கதவு எண் 45, கம்பர் தெரு நாமக்கல் மாவட்டத்தில் வசிக்கும் இராமசாமியின் மகள் கனகவள்ளி, கணினிப் பயிற்றுநர் பணி வேண்டி தன் விவரப் பட்டியலை நிரப்புகிறார். தேர்வர் தன்னை கனகவள்ளியாக பாவித்து பணி வாய்ப்பு வேண்டி தன் விவரப் பட்டியலை நிரப்புக. **(விண்ணப்பம் தனியாக தரப்பட்டுள்ளது)**



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

42. நாம் எப்போதும் ஒரே மனநிலையில் இருப்பதில்லை நம்மைச் சுற்றி நிகழும் செயல்களால் நாம் அலைக்கழிக்கப்படுகிறோம். உடன் பயில்பவருடனோ உடன் பிறந்தவருடனோ எதிர்பாராமல் சச்சரவு ஏற்படுகிறது. இந்தச் சமயத்தில் சினம் கொள்ளத்தக்க சொற்களைப் பேசுகிறோம்; கேட்கிறோம்; கைகலப்பில் ஈடுபடுகிறோம். இது காணும் கற்ற அறங்கள் நமக்குக் கைகொடுக்க வேண்டாமா ? மாணவ நிலையில் நாம் பின்பற்ற வேண்டிய அறங்களும் அதனால் ஏற்படும் நன்மைகளும் பட்டியலிடுக.

**(அல்லது)**

ஆ. Therukoothu is, as its name indicates a popular form of theatre performed in the streets. It is performed by rural artists. The stories are derived from epics like Ramayana, Mahabharatha and other ancient puranas. There are more songs in the play with dialogues improvised by the artists on the Spot. Fifteen to Twenty actors with a small orchestra forms a Koothu troupe. Though the orchestra has a singer, the artists sing in their own voices. Artists sing in their own voices. Artists dress themselves with heavy constumes and bright makeup. Koothu is very popular among rural areas.

**செவி மாற்றுத் திறனாளிக்கான மாற்று வினா- பத்தியைப் படித்து பதில் தருக.**

ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று சிலப்பதிகாரம். இது முத்தமிழ்க் காப்பியம், குடிமக்கள் காப்பியம் என்றும் சிறப்பிக்கப்படுகிறது. மூவேந்தர் பற்றிய செய்திகளைக் கூறுகிறது. இது புகார்க்காண்டம், மதுரைக் காண்டம், வஞ்சிக் காண்டம் என மூன்று காண்டங்களையும், முப்பது காதைகளையும் உடையது. கோவலன், கண்ணகி, மாதவி வாழ்க்கையைப் பாடுவது. மணிமேகலைக் காப்பியத்துடன் கதைதொடர்பு கொண்டிருப்பதால் இவையிரண்டும் இரட்டைக் காப்பியங்கள் எனவும் அழைக்கப்படுகின்றன. சிலப்பதிகாரத்தின் ஆசிரியர் இளங்கோவடிகள் சேர மரபைச் சேர்ந்தவர்.

1. சிலப்பதிகாரத்தின் ஆசிரியர் யார் ?
2. சிலப்பதிகாரம் எத்தனை காண்டங்களை உடையது ? அவை யாவை ?
3. இரட்டைக் காப்பியங்கள் என்று அழைக்கப்படும் நூல்கள் எவை ?
4. சிலப்பதிகாரம் எவ்வாறெல்லாம் சிறப்பிக்கப்படுகிறது ?
5. சிலப்பதிகாரம் எத்தனை காதைகளை உடையது ?

## பகுதி-V

**அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும்.** **3x8=24**

43 அ. ஒரு குழந்தையைத் தூக்கவும் கீழே விழுந்த ஒரு தேனீர்க் கோப்பையை எடுக்கவும் மென் பொருள் அக்கறை கொள்ளுமா ? வெறும் வணிகத்துடன் நின்று விடுமா ? இக்கருத்துகளை ஒட்டிச் 'செயற்கை நுண்ணறிவின் எதிர்கால வெளிப்பாடுகள்' பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

**(அல்லது)**

ஆ. ஜெயகாந்தன் நினைவுச் சிறப்பிதழை வார இதழ் ஒன்று வெளியிட இருக்கிறது. அதற்கான ஒரு சுவரொட்டியை வடிவமைத்து எழுதுக.

44. அ. "கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே" என்கிறது வெற்றி வேற்கை. மேரியிடமிருந்து பறிக்கப்பட்ட புத்தகம் அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச் சுடரை ஏற்றிய கதையைப் பற்றிய உங்களின் கருத்துகளை விவரிக்க.

**(அல்லது)**

ஆ. இராமானுசர் நாடகத்தின் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

45. அ. "விண்வெளியும் கல்பனா சாவ்லாவும்" என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.

**(அல்லது)**

ஆ) உங்கள் பகுதியில் நடைபெற்ற அரசுப் பொருட்காட்சிக்குச் சென்று வந்த நிகழ்வைக் கட்டுரையாக்குக.

******************************



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com